| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | இராமநாதபுரம் | காலம்: | 17/04/2024 | முதல் | 21/04/2024 | |
| அறிக்கை எண் : | 031/ 2024 | வெளியீட்டு நாள்: | 16/04/2024 | | | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26°-28° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.04.2024 **முதல்** 15.04.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-04-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/04 | 12/04 | 13/04 | 14/04 | 15/04 | தேதி | நாள்-1 17/04 | நாள்-2 18/04 | நாள்-3 19/04 | நாள்-4 20/04 | நாள்-5 21/04 |
| 0.0 | 1.6 | 1.2 | 1.6 | 0.3 | மழை (மி.மீ) | 1 | 0 | 0 | 0 | 0 |
| 36 | 36 | 36 | 37 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 37 | 38 | 38 |
| 27 | 28 | 27 | 26 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 27 | 27 | 28 | 27 | 27 |
| 5 | 6 | 5 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 4 | 5 | 5 | 7 |
| 74 | 78 | 76 | 74 | 80 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 73 | 68 | 76 | 67 | 76 | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 9 | 14 | 10 | 5 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 18 | 20 | 20 | 22 | 22 |
| கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 17 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 27°-28°செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 18 முதல் 22 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

வருகின்ற நாட்களில் வெப்பநிலை உயர்வின் காரணமாக மண்ணின் ஈரத்தன்மை வெகுவிரைவில் குறைய வாய்ப்புள்ளது.

எனவே சாகுபடி செய்துள்ள தோட்டக்கலைப் பயிர்களை சுற்றிலும் காய்ந்த புற்கள், இலை, தழைகள் மற்றும் பண்ணை கழிவுகளை கொண்டு மூடாக்கு இடுவதால் மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கப்படும்.

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்ப்போர் பகல் நேரங்களில் 30-60 நிமிட இடைவெளியில் 1 முதல் 5 நிமிடங்களுக்கு விலங்குகளின் உடலில் நேரடியாக தண்ணீரை தெளிப்பதன் மூலம் வெப்ப அழுத்தத்தில் இருந்து விலங்குகளை பாதுகாக்கலாம். மாட்டு கொட்டகையின் பக்கவாட்டில் (ஓரங்களில்) ஈரமான சணல் சாக்குபைகளை கட்டி விடவும். தாதுக்களுக்கான அதிகரித்த தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வெப்பமான காலநிலையின் போது விலங்குகளுக்கு அதிகரித்த தாது உப்புச் சேர்க்கையை உறுதி செய்யவும். கால்நடைகளுக்கு குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

**விவசாயம் :**

மாவட்டத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு (17.04.2024 முதல் 21.04.2024) அதிகமான வெப்பம் மற்றும் ஈரப்பத்ததுடன் கூடிய அசவுகரியமான வானிலை நிலவ வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் வயல்வெளி வேலைகளை காலை மற்றும் மாலை நேரங்களில் செய்ய திட்டமிடவும். போதுமான அளவு தண்ணீர் குடிக்கும் படியும் மதிய (12 மணி முதல் 4 மணி வரை) நேரத்தில் வயலில் வேலை செய்வதைத் தவிர்த்து பாதுகாப்பாக இருக்கும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 18 முதல் 22 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : தென்னை, பருத்தி, கால்நடை.**

**தென்னை**:

நிலவும் வெப்பமான வானிலையின் காரணமாக தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இந்த பூச்சிகள் தேன் போன்ற கழிவுப்பொருட்களை தென்னை ஓலைகளின் கீழ்பரப்பில் வைக்கின்றன. பூச்சிகள் தேன் போன்ற கழிவு பொருளை கீழ் மட்ட அடுக்கில் உள்ள தென்னை ஓலைகளில் படிய செய்கின்றன. இதனால் இலைகள் மீது கருப்பு பூஞ்சாணம் பரவுவதால் இலைகளானது கருமையாக காட்சியளிக்கும்.

இதனை கட்டுப்படுத்த தென்னை மர ஓலைகளின் அடி மற்றும் மேல் புறத்தில் தண்ணீரை பீயச்சி அடிக்கலாம்.

ஒரு ஏக்கருக்கு இரண்டு என்ற எண்ணிக்கையில் மஞ்சள் நிற ஓட்டும் பொறிகளை வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.

பாதிப்பு அதிகமாகும் போது வேப்பெண்ணெய் 5 மில்லி உடன் 1 மில்லி ஒட்டும் திரவம் சேர்த்து இலைகளின் அடிப்பரப்பில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும்.

மைதா மாவினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 25 கிராம் என்ற அளவில் எடுத்து கொதிக்க வைத்து ஆறிய பின் கரும் பூஞ்சாணத்தின் மீது படும்படி நன்கு தெளிக்க வேண்டும்.

**பருத்தி**:

பருத்தி பயிரில் மாவுப் பூச்சிகளின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. பருத்தியில் மாவுப்பூச்சி தாக்கப்பட்ட இலையின் அடிப்புறத்தில், மெழுகு போன்று காணப்படும். இதனால் கரிப்பூசண வளர்ச்சியும் காணப்படும். தாக்கப்பட்ட செடிகள் வாடி, கருப்பு நிறமாக மாறும்.

இதனை கட்டுப்படுத்த பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். வேப்பெண்ணெய் 2% (20மிலி/லிட்டர்)

அல்லது மீன்எண்ணெய் சோப் 25 கிராம் / லிட்டர் அல்லது ஒரு ஏக்கருக்கு 800மில்லி என்ற அளவில் ப்ரோபெனோபாஸ் கலந்து தெளிக்கலாம்.

**கால்நடை**:

நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரித்தல் மிகவும் அவசியமாகும்.

கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாகவும் அதே நேரத்தில் சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறும் அமைக்க வேண்டும்.

அதாவது கொட்டகைகளின் நீள வட்டம் கிழக்கு மேற்காக அமைவது நல்லது. வேகமாக காற்று வீசும் இடங்களில் மரங்கள் வளர்த்தால் காற்றின் வேகத்தை ஓரளவு குறைக்க உதவும்.